RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s122

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் வினைப்பயன் குறித்த நம்பிக்கைகள்

ந. இராசேந்திரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Beliefs on time tested karma in Tamil literature

N. Rasendran [a, *]

[a] Department of Tamil, State Institute of Educational Research and Training, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: nrscerttn@gmail.com

Received: 04-11-2020
Revised: 07-06-2021
Accepted: 11-06-2021
Published: 16-06-2021

Check for updates

## ABSTRACT

The presence or absence of karma depends on one's belief. Since the Sangam period, the belief in karma existed in the society according to the ample evidences drawn from the Tamil literature. These evidences on karma are available in all ages such as Sangam literature, epics, middle age literature, contemporary literature. The concepts related to karma available in the poems of Kaniyan poonkundran are reflected even in the Bharathiyar's poems. Contemporary poets also express the karma based concepts in their creative works. This article analyses the supportive role of time-tested karma in the positive social reforming.

**Keywords:** Tamil literature, Sangam literature, Epics, Middle age Literature, Contemporary literature.

## முன்னுரை

ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பது அறிவியல். செயலுக்கேற்ற பலனை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது நம்பிக்கை. சமூகத்தில் முற்பிறவி குறித்தும் துறக்க நரகம் குறித்தும் நிலவும் நம்பிக்கைகளின் பின்னே வினைப்பயன் குறித்த நம்பிக்கைகள் மக்களிடத்தில் நிறைந்திருப்பதைக் காணலாம். பாவ புண்ணியங்களின் பலனாகக் கருதப்படும் இத்தகைய வினைப்பயன் குறித்த நம்பிக்கைகள் தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் இடம் பெற்றுள்ளமை குறித்து இக்கட்டுரை இயம்புகிறது.

## தமிழில் வினைப்பயன் குறித்த நம்பிக்கையின் தோற்றம்

தமிழில் வினைப்பயன் குறித்த நம்பிக்கை பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளதைத் தொல்காப்பியம் நமக்கு உணர்த்துகிறது.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதனூ லாகும் (தொல்காப்பியம் - மரபியல்: நூ. 640)

எனும் மரபியல் நூற்பாவில் முதல் நூல் எழுத வல்லோர் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் நல்வினை, தீவினை ஆகிய இரு வகை வினைகளிலிருந்தும் நீங்கிய முனைவன் கண்டது முதனூல் என்பார்.

ஒன்றி உயர்ந்த பால தாணையின் (தொல்காப்பியம் - களவியல்: நூ. 90)

எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர், "இருவருள்ளமும் பிறப்புத் தோறும் ஒன்றி நல்வினைக்கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின் என்றவாறு" என விளக்கம் கூறுவதிலிருந்தும் வினைப்பயன் நம்பிக்கை தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் வழக்கத்தில் இருந்துள்ளதைத் தெளியலாம் (Adigalasiriyar, 1988).

நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆர்உயிர்

முறை வழிப்படூஉம் என்பது திறவோர்

காட்சியின் தெளிந்தனம் (Avvai Duraisamy Pillai, 1996)

யாம் செய் தொல் வினைக்கு எவன் பேதுற்றனை? (Ramasubramaniam, 2009)

பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும் (Parimanam, Balasubramaniyam, 2004a)

தொல்வினைப் பயன்துய்ப்ப துறக்கம் (Parimanam, Balasubramaniyam, 2004a)

அனைத்தால் தோழி நம் தொல்வினைப் பயனே (Parimanam, Balasubramaniyam, 2004b)

என்றவாறு அமைந்துள்ள சங்க இலக்கியப் பாடல் வரிகள் பண்டைய தமிழகத்தின் வினைப்பயன் நம்பிக்கையை அறியத்தருகின்றன.

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறு இன்று எய்துப

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

வாயே ஆகுதல் வாய்த்தனம் (Parimanam, Balasubramaniyam, 2004b)

எனவும்,

நன்று செய் மருங்கில் தீது இல் என்னும்

தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்றுகொல்? (Parimanam, Balasubramaniyam, 2004b)

எனவும் உரைக்கும் அகநானூறு தொன்றுதொட்டே வினைப்பயன் நம்பிக்கை தமிழகத்தில் நிலவியிருந்ததைத் தெரிவிக்கின்றது.

"நியதிக்கொள்கையும், வினைக்கொள்கையும் வேறு வேறு என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விரண்டு கொள்கைகளுமே வேதங்களில் காணப்படவில்லை. ஆதலின், இவை ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியாவில் வாழ்ந்த திராவிடப் பெருமக்களுக்கு உரியன என்று மேலைநாட்டு இந்தியச் சிந்தனையாளர்கள் (Indologists) ஆய்ந்துரைத்துள்ளனர். ஆசீவகரின் நியதிக்கொள்கையின் நிழல் கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலில் பொலிதல் காணலாம்" என்பார் சோ.ந. கந்தசாமி.

இவ்வாறு பழங்காலந்தொட்டே வினைப்பயன் நம்பிக்கை தமிழர்களிடத்தில் இருந்துள்ளது தெளிவாகிறது (Kandasamy, 1976).

## வினைப்பயன்

ஒருவர் செய்த வினையின் பயனால் விளையும் வினையே வினைப்பயன் எனப்படுகிறது. கீழ்க்கணக்கு நூல்களில் வினைப்பயன் நம்பிக்கையைப் பின்வரும் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

வினைப்பயன் வந்தக்கால்

எம்மை யிகழ்ந்த வினைப் பயத்தால்

நினைப்பக் கிடந்த தெவனுண்டாம் மேலை

வினைப்பய னல்லாற் பிற

வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்!

நினைப்ப வருவதொன் றில்

மேற்கண்ட நான்கு இடங்களில் வினைப்பயன் குறித்து நேரடியாக உரைத்துள்ள நாலடி, முதல் மூன்று இடங்களிலும் தீவினைப் பயன் பற்றியும், நான்காவதில் நல்வினையின் பயன் பற்றியும் மெய்யியல் கருத்தைப் புலப்படுத்தியுள்ளது (Rajagopala Pillai, 2000).

வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு (பழ. 218 : 1)

என்னும் வரியில் உலகியல் பொருளில் ஏதேனும் ஒருபயன் கருதி வினையாற்ற வேண்டும் எனவும்,

வினைப்பயன் மெய்யுறுதல் அஞ்சி (பழ. 160)

என்னும் வரியில் தீவினையின் பயன் தன்னைச் சார்தலுக்கு அஞ்சி என்று மெய்யியல் நிலைப்பாட்டிலும் பழமொழி வினைப்பயன் என்ற சொல்லை ஆண்டுள்ளது. முன்பொழுதில் ஒருவன் பிறருக்குச் செய்யும் தீமையினால் பின்பொழுதில் பிறர் செய்யாது விட்டொழித்தாலும் அவன் செய்த தீமையின் பயனால் தானாகவே அவனுக்குத் தீவினை வந்தடையும் என்பதனை,

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும் (குறள். 319)

எனக் குறள் கூறுகின்றது (Parimelalhagar, 2002).

## காப்பியங்கள் மற்றும் புராணங்களில் வினைப்பயன் குறித்த செய்திகள்

தமிழ் முதற்காப்பியமான சிலப்பதிகாரம் தொடங்கி ஒவ்வொரு காப்பியத்திலும் வினைப்பயன் நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூம்

உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்

ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்

என்பதில் தொடங்கி, 'வினை விளைகாலம்', 'வினை விளை' (சிலம்பு. பதிகம்.38) என்றவாறு வினைகள் பயனைத்தரும் காலம் என்ற பொருளில் சொற்களை ஆண்டுள்ளது. ஊழ்வினைப் பயன்கொல்? உரைசால் சிறப்பின் எனவரும் இடத்தில் பழவினையின் பயன் என்ற பொருளில் ஊழ்வினை எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது (Venkatasamy Nattar, 2018).

"பழவினைப் பயன் நீ பரியல்" என்று எழுந்தேன்

பட்டேன் என்தன் பழ வினைப் பயத்தால்

மிக்க என்கணவன் வினைப் பயன் உய்ப்ப

தீப் பிறப்பு உழந்தோர் செய் வினைப் பயத்தான்

கழை வளர் கான் யாற்றுப் பழ வினைப் பயத்தான்

பற்றே பவமே தோற்றம் வினைப் பயன்

வினைப்பயன் விளையும் காலை

நல்வினைப்பயன் கொல் நான்கண்டது

மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்

எனும் மணிமேகலை அடிகளில் வினைப்பயன் என்ற சொல் உள்ள பதினொரு இடங்களில், முன்னர் செய்த தீவினையின் பயன் என்ற பொருளில் ஒன்பது இடங்களிலும், நல்வினையின் பயன் என்ற பொருளில் இரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது (Duraisami Pillai, Avvai, 1943).

முதிர்தரு தவமுடை முனிவர் ஆயினும்

பொதுவறு திருவொடு பொலிவர் ஆயினும்,

மதியினர் ஆயினும், வலியர் ஆயினும்,

விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்? (கந்தபுராணம், பா.2198)

என்ற பாடலில் கந்தபுராணமும்,

மன்னாநீ நின் வாழ்வை முடித்தாய் மதி அற்றாய்

உன்னால் அன்று ஈது ஊழ்வினை என்றே உணர்கின்றேன் (பூவண்ணன், (உ.ஆ.), கம்பராமாயணம், மாரீசன் வதைப்படலம்: பா. 177)

புறத்தினி உரைப்பது என்னே பூவின்மேல் புனிதற் கேனும்

அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி; அஃது உறுதி என்ப (பூவண்ணன் (உ.ஆ.), இராமாயணம், கிட்கிந்தா காண்டம், அரசியல்: பா. 35.)

ஆகுவது ஆகுங் காலத்து அழிவதும் அழிந்து சிந்திப்

போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்

சேகற உணர்ந்தோர் நின்னில் யாருளர்? வருத்தம் செய்யாது

ஏகுதி எம்மை நோக்கி இரங்கலை என்றும் உள்ளாய் (பூவண்ணன்(உ.ஆ.), கம்பராமாயணம், கும்பகர்ணன் வதைப்படலம்:பா. 166.)

என்றவாறு உரிய காலத்தில் நடக்க வேண்டியது நடந்தே தீரும் என இராமாயணம் கூறுகிறது. இங்கு வினையின் பயனானது ஒன்றன்பின் ஒன்றாக முறை மாறாமல் வரும் என்ற கருத்து பெறப்படுகிறது.

வீதலும் பிழைத்தல் தானும் விதிவழி அன்றி நம்மால்

ஆதலும் அழிவும் உண்டோ நின்னில்வேறு அறிஞர் உண்டோ?

பூதலம் தன்னில் யாவர் புதல்வரோடு இறந்தார் ஐயா!

சாதலிங்கு இயற்கை அன்றென்று அருளுடன் தடுத்த காலை (உ.வே.ச. கிருஷ்ணமாசாரி, உ.வே.மை.மு. கோபால கிருஷ்ணமாசாரி (உ.ஆ.), வில்லிபாரதம், 13:151) எனப் பாரதமும், பிறப்பும் இறப்பும் விதிவழி அல்லாமல் வேறு வகையால் வருவனவல்ல என்பது குறித்துப் பேசியுள்ளது.

## அறநூல்களில் வினைப்பயன்

அறநூல்களிலும் வினைப்பயன் நம்பிக்கைகள் குறித்த கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே (நறுந்தொகை)

எனவும்,

வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்

அனைத்தாய நூலகத்தும் இல்லை (நல்வழி)

எனவும் வினைப்பயன் நம்பிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. விதியை வெல்ல நூல்களில் கூட உபாயம் ஏதும் இல்லை எனவும் இதன்வழி அறிய முடிகிறது.

## பாரதி பாடல்களில் வினைப்பயன்

பாரதி பாடல்களிலும் வினைப்பயன் குறித்த நம்பிக்கையைக் காணலாம். எடுத்துக்காட்டாக ,

“விதி! விதி! விதி! மகனே- இனி வேறெது சொல்லுவ னட மகனே!

கதியுறுங் கால னன்றோ-இந்தக் கயமக னெனநினைச் சார்ந்துவிட்டான்?

கொதியுறு முளம் வேண்டா - நின்றன் கொள்கையின் படி யவர்தமை யழைப்பேன்

வதியுறு மனைசெல்வாய்; - என்று வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான்” (பாஞ்சாலி சபதம் : பா. 108) என வரும் கவிதையில் பாரதியார் ஊழ்வினையின் வலிமையைப் பறைசாற்றும் முகத்தான், விதி எனும் சொல்லை மும்முறை அடுக்கியுரைத்துள்ளார்.

## முடிவுரை

பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் பாரதி பாடல்கள் வரை வினைப்பயன் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. இன்றும் மக்கள் மத்தியில் வினைவிதைத்தவன் வினை அறுப்பான் எனும் பழமொழி நிலைபெற்றுள்ளதைக் காணலாம். நம்பிக்கைகள் சமூகத்தை வழி நடத்துவதில் பெரும் பங்காற்றுவன என்பதை மறுப்பதற்கில்லை. வினைப்பயன் நம்பிக்கைகளும் சமூகத்தில் நற்செயல்கள் பெருக வழிநடத்துவதற்காகவே இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன எனத் தெளிய முடிகின்றது.

## References

Adigalasiriyar, J.P.G., (1988) THolkappiyam, Solathigaram Ilampuranar Urai, Tamil University, Tanjavur, India

Avvai Duraisamy Pillai, (1996) Purananooru Moolamum Uraiyum, Kazaga Veliyedu, Chennai, India.

Duraisami Pillai, Avvai, S., (1943) Manimegalai, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunelveli, India

Kachiyappa Sivacharyar, (1983) Kanda Puranam, Vidyanoobalanayanthirasalai, Chennai, India

Kandhasamy, S.N., (1976) Tamil and philosophy, Manivasagar Library, Chidambaram, India

Parimanam, A.M. Balasubramaniyam, K.V., (2004b) Akananuru, New century book house, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004a) Kalithogai, New century book house, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Rajagopala Pillai, C., (2000) Original text of an naladiyar, International Institute of Tamil Studies, Chennai, India

Ramasubramaniam, V.T., (2009) Natrinai (Moolamum Uraiyum), Thirumagal Nilayam, Tamil nadu, India.

Venkatasamy Nattar, Na.Mu., (2018), Silapathikaram Moolamum Uraiyum - First Edition, Gowra Agency, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License